

தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேற்று முன்தினம் (8.8.2024) சேலம் தலவாய்ப்பட்டி இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.ராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் இயக்குனர் மரு.இளங்கோ மகேஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மாவட்ட வேலைவாய்ப்பு – தொழில் நெறி வழிகாட்டும் மையம் – அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் –

# இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஆகிய இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் ஆய்வு செய்தார்!

சேலம், ஆக. 10 -

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேற்று முன்தினம் (08.08.2024) சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், இ.எஸ்.ஐ மருத்துவமனை மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்விற்கு பின்னர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் முன் எப்போதும் இல்லாத வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்புத்துறைக்கு ரூ.2,877 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் 72 அரசினர் தொழில்பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்கான நவீன இயந்திரங்களை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்ப மையத்தினை 4.0 உருவாக்கி தந்துள்ளார்கள்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அரசு போட்டித்தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டு, இதன் மூலம் பல்வேறு வேலைவாய்ப்புகளை இளைஞர்கள் பெற்று வருகின்றனர்.

மேன்மேலும் இவற்றை மேம்படுத்தும் வகையில் மாவட்டம் தோறும் இதுபோன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம் அரசு தொழில்பயிற்சி நிலையத்தில் செயல்பட்டுவரும் நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டுள்ள ஆய்வகங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது குறித்தும், அரசு தொழில்பயிற்சி நிலையத்தில் மேனுபேக்சரிங் ப்ராசஸ் கண்ரோல், ஆட்டோமேசன், இண்டஸ்ட்ரியல் ரோபோட்டிக்ஸ், டிஜிட்டல் மேனுபேக்சரிங் டேக்னிசியன், அட்வான்ஸ்டு சிஎன்சி மெசினிங் டெக்னீசியன், வெல்டர், வர்ணம் பூசுபவர், கம்பியாள், மின்பணியாள், பொருத்துநர், ஏசி மெக்கானிக் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாநில அளவில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய ங்களில் பயின்ற 2,700 மாணவர்களில் 2,300 மாணவர்களுக்கு பல்வேறு தனியார் துறைகளில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடைபெற்ற தேர்வுகளில் கடந்த 2021-2022 ஆண்டு நடத்தப்பட்ட 9 வகுப்புகளில் கலந்து கொண்ட 720 மாணவர்களில் 60 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2022-2023 ஆண்டு நடத்தப்பட்ட 16 வகுப்புகளில் கலந்து கொண்ட 1,197 மாணவர்களில் 131 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2023-2024 ஆண்டு நடத்தப்பட்ட 12 வகுப்புகளில் கலந்து கொண்ட 502 மாணவர்களில் 220 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். 2024 ஆண்டு இதுவரை நடத்தப்பட்ட 5 வகுப்புகளில் கலந்து கொண்ட 460 மாணவர்களில் 9 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட 42 வகுப்புகளில் கலந்து கொண்ட 2,879 மாணவர்களில் 420 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும், சேலம் மண்டலத்தில் 531 மாணவர்களுக்கும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது தவிர தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலம் 12,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெற்று வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கால் நடை உதவி மருத்துவருக்கான தேர்விற்கு இம்மையத்தில் இலவச பயிற்சி பெற்ற 151 நபர்களில் 131 நபர்கள் பணி நியமனம் பெற்றுள்ளது பாராட்டுக்குரியதாகும். விடா முயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பு இருந்தால் போட்டி தேர்வுகளில் மாணவ, மாணவிகள் எளிதாக வெற்றி பெறலாம்.

இவ்வாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்கள்.

முன்னதாக, சேலம் தளவாய்ப்பட்டி, இ.எஸ்.ஐ மருத்துவமனையில் நோயாளிகள் பதிவு செய்யும் இடம், மருத்துவர் அறை, மருந்து வழங்கும் இடம், அவசர சிகிச்சை பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, படுக்கை வசதி உள்ளிட்ட வசதிகள் குறித்தும், மருந்தகத்தில் சிகிச்சைக்கு வருபவர்களிடம் உரிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்தும், அங்கு சிகிச்சை பெற வந்திருந்த நபர்களிடம் மருத்துவமனையின் வசதிகள் மற்றும் தேவைகள் குறித்தும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கேட்டறிந்து உரிய சேவைகள் நோயாளிகளுக்கு வழங்க மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுகளின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்பயிற்சி நிலைய மண்டல இணை இயக்குநர் திருமதி.ஆ.லதா, அரசினர் தொழில்பயிற்சி நிலைய மண்டல இணை இயக்குநர் முஸ்தப்பா, வேலைவாய்ப்புத் துறை துணை இயக்குநர் செ.மணி இ.எஸ்.ஐ மருத்துவமனையின் இயக்குநர் மரு. இளங்கோ மகேஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்!

# புதுடெல்லியில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

## ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கமிட்டனர்!

புதுடெல்லி, ஆக. 10 -

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதை கண்டித்து டெல்லியில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நடுக்கடலில் மீன்பிடிக் கும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், தாக்குவதும், மீன்பிடி உபகரணங்களை பறித்து செல்வதும் என அராஜகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதைக் கண்டித்து டெல்லி ஜந்தர் மந்தரில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அகில இந்திய காங்கிரஸ் மீனவர் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மீனவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ்குமார், தாரகை கத்பர்ட் உள்ளிட்டோரும் போராட்டத்தில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ்நாட்டு மீனவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்காத ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணியினை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (Mech) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண். எம்9/1596/2024.**
பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள அனைத்து பகுதிகளிலும், குறுகிய தெருக்களிலும் கொசு ஒழிப்பு பணிக்காக, புகை பரப்பும் இயந்திரத்தை வாகனத்தில் பொருத்தி எடுத்துச் செல்வதற்கு, 65 எண்ணிக்கையில் **TATA ACE** அல்லது அதற்கு இணையான வகை வாகனங்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு வாடகைக்கு அமர்த்துதல்.

முன்வைப்பு தொகை: ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **20.08.2024 பிற்பகல் 3.00 மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **21.08.2024 பிற்பகல் 3.30 மணிக்கு**

மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2907 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, நாமக்கல்லில் நடைபெற்ற நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் (ஆவின்) 3 வது பேரவை கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் சா உமா முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் ஆவின் பொது மேலாளர் மருத்துவர் ரா. சண்முகம், துணை பதிவாளர் (பால்வளம்) ஐ.சண்முக நிதி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க பொதுச் செயலாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர்

# முன்னாள் எம்.எல்.ஏ. வி.சி.சந்திரகுமார் தாயார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 10-

கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் - முன்னாள் எம்.எல்.ஏ., வி.சி.சந்திரகுமாரின் தாயார் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளரும், ஈரோடு கிழக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.சி. சந்திரகுமார் அவர்களின் அன்புத் தாயார் திருமதி சொ.சம்பூர்ணம் அம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

ஆளாக்கிய அன்னையை இழந்து வாடும் வி.சி. சந்திரகுமார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், சித்தன்னவாசல் சுற்றுலா தலத்திற்கு, தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் “வேர்களைத் தேடி” திட்டத்தின்கீழ், வருகைபுரிந்துள்ள அயலகத் தமிழ் இளைஞர்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் 07.08.2024 அன்று பொன்னாடை அணிவித்து, பரிசுகள் வழங்கி வரவேற்றார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, அன்னவாசல் ஒன்றியக் குழுத் தலைவர் வி.ராமசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசின் இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்:

# சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநாட்டும் மகத்தான திட்டம்!

## மாநிலங்களவையில் - டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு பெருமிதம்!

**புதுடெல்லி, ஆக.10**

**விபத்தால் பாதிக்கப்படுபவர் எந்த மதம், நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், செலவே இல்லாமல் உயர்தர சிகிச்சை அளிக்க வகை செய்யும் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், சமத்துவத்தையும் சமூக நீதியையும் எடுத்துரைக்கும் மகத்தான திட்டமாகும் என மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.**



மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:-

2024-25 ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் சுகாதாரத் துறை தொடர்பான சில முக்கிய விஷயங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகி றேன். 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டில், சுகாதாரத்துறைக்கென மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகை சுமார் 91 ஆயிரம் கோடிகள் மட்டுமே. இது போதுமானதாக நிச்சயம் இருக்க முடியாது. குறிப்பாக மருத்துவ ஆராய்ச்சிக்கென இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 3 ஆயிரத்து 300 கோடி ரூபாய். பல்வேறு நோய்கள் புதிது புதிதாக உருவாகிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் முழு அளவிலான ஆராய்ச்சிகளுக்கு இந்தத் தொகை எப்படிப் போதுமானதாக இருக்கும்?

சுகாதாரத்துறை தொடர்பாக கசப்பான உண்மைகளுடன் கூடிய கடினமான கேள்விகளை இங்கே எழுப்பினால், சுகாதாரத் துறை மாநில அரசின் வரம்புக்குள் வருகிறது என்று பதில் சொல்கிறது ஒன்றிய அரசு. ஆனால் தேசிய சுகாதார ஆணையம் போன்ற அமைப்புகளை வைத்துக் கொண்டு கூட்டாட்சித் தத்துவத்தை நசுக்கும் வகையில் நாடு முழுக்க சுகாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்துவது ஒன்றிய அரசுதான். பலப்பல மாநிலங்கள் எதிர்த்தபோதும் நீட் தேர்வுகளை தொடர்ந்து ஒன்றிய அரசு நடத்துவது ஒரு சிறந்த உதாரணம்.

சுகாதாரத் தேவைகள் பூர்த்தியாகாமல் ஒருவர் கூட விடுபடக்கூடாது என்ற முழக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பிரதம மந்திரியின் சுகாதாரத் திட்டத்துக்கு 7300 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தத் தொகை சில கோடி பேரையாவது இத்திட்டத்தில் சேர்க்க முடியாமல் தவிர்க்கும் அளவுக்கு சிறிய தொகை என்பதை மத்திய அரசு உணரவில்லை.

மருத்துவக் காப்பீட்டு திட்டத்திலும் பெரும் குழப்பங்களும், குறைபாடுகளும் நிலவுகிறது. ஒரு அறுவை சிகிச்சையை அரசு மருத்துவமனையில் செய்வதற்கு ஆகும் செலவுக்கும் தனியார் மருத்துவமனையில் செய்வதற்கு ஆகும் செலவுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. ஆனால் இதை முழுமையாக ஆய்வு செய்யாமல் ஏதோ ஒரு தொகையை நிர்ணயிப்பதால் தனியார் மருத்துவமனைகளில் நியாயமாக ஆகும் செலவுகளை குறிப்பிட்டு ஆவணங்களை அனுப்பினால் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் அவற்றை நிராகரிக்கின்றன. எனவே மத்திய அரசு, ஒரு நிபுணர் குழுவை நியமித்து இதுபோன்ற சிகிச்சைகளுக்கு ஆகும் கட்டணங்களை நியாயமான முறையில் வரையறுக்க வேண்டும்.

டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு 4523 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, அறிவித்து சுமார் ஆறாண்டுகளாகியும் ஒரு சுவர் கூட கட்டப்படாத மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பற்றி பாராமுகமாக இருப்பதும் ஒட்டுமொத்த மக்களுக்கும் வேதனை அளிப்பதாக உள்ளது.

**தமிழ்நாடு**

எங்கள் துடிப்புமிக்க தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலிzன் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு, மருத்துவத் துறையில் பல மகத்தான சாதனைகளைச் செய்து வருகிறது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, போன்ற எண்ணற்ற திட்டங்கள் அடிமட்ட ஏழைகளுக்கு தரமான, எளிதான சிகிச்சை வசதி அளிப்பதை உறுதி செய்கின்றன.

விபத்தில் படுகாயம் அடைபவர்களின் உயிரைக் காக்க வாய்ப்புள்ள கோல்டன் ஹவர்ஸ் என்று சொல்லப்படும் அந்த முக்கியமான நேரத்து சிகிச்சை வசதி மற்றும் அதற்கான சூழலை ஏற்படுத்தித்தருவதில் இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம் மகத்தான இடத்தைப் பிடித்திருக்கிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

விபத்தால் பாதிக்கப்படுபவர் எந்த மதம், நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், செலவே இல்லாமல் உயர்தர சிகிச்சை அளிக்க வகைசெய்யும் இந்தத் திட்டம், சமத்துவத்தையும் சமூக நீதியையும் எடுத்துரைக்கும் மகத்தான திட்டமாகும்.

2022-ஆம் ஆண்டில் இந்தியாவில் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 14.13 லட்சம் பேர். அதன்காரனமாக மரணித்தவர்கள் 9.16 லட்சம் பேர். இந்த வேதனையான உண்மைகளை மனதில் கொண்டு, ஒவ்வொரு புற்று நோயாளிகள் தொடர்பான புள்ளி விவரங்களை ஆவணப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். தற்போது நடைமுறையில் உள்ள எந்தப் புள்ளிவிவர ஏற்பாடும் முழுமையான உண்மையை பிரதிபலிப்பதாக இல்லை. இந்த நிலையை ஒன்றிய அரசு மாற்ற வேண்டும்.

அதேபோல, உடல் பருமன் மற்றும் மனநல பாதிப்பு ஆகிய இரண்டு பாதிப்புகளில் இருந்து மக்களைக் காக்க ஒரு விரிவான திட்டத்தை ஒன்றிய அரசு உருவாக்க வேண்டிய நேரம் வந்து விட்டதாகவே கருதுகிறேன்.

மருத்துவக் காப்பீட்டுக்கும், உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் ஆபரேஷன் தியேட்டரில் பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்களுக்கும் ஜி.எஸ்.டி வரிவிதிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

தனியார் நடத்தும் மருத்துவமனைகள் மீது விதிக்கப்படும் தவறான வரிகளால் நாட்டில் லட்சக்கணக்கான மருத்துவமனைகள் தொடர்ந்து சிரமமின்றி இயங்க கஷ்டப்படுவதை ஒரு மருத்துவராக இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

அறுவை சிகிச்சை மைய கருவிகள், ஸ்கேன் மெஷின், அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள மருத்துவ உபகரணங்கள், குறைந்தது 25 படுக்கைகள்,சுமார் 20 மருத்துவர்கள், 40 நர்ஸ்கள், நிர்வாகப் பிரிவு, கனக்குப் பிரிவு, பாதுகாப்பு பிரிவு ஊழியர்கள் என ஒரு முழுமையான மருத்துவமனையை நிர்வகிப்பது எளிதான காரியமல்ல. இந்த அத்தனை விஷயங்களுக்கும் 18 சதவீதம் முதல் 28 சதவீதம் வரை ஜி.எஸ்.டி வரியை மருத்துவமனை நிர்வாகம் செலுத்துகிறது.

ஆனால், மருத்துவ சேவை என்பது விலக்கு அளிக்கப்பட்ட சேவை என்பதால் மருத்துவமனை நிர்வாகத்தால் ஜி.எஸ்.டி வரியை வேறுவகையில் திரும்பப்பெற இயலவில்லை. மற்ற செலவுகளோடு சமன் செய்துகொள்ளவும் வழியில்லை. எனவே, ஏற்றுமதி சேவைகளுக்கு முழு வரிவிலக்கு அளிப்பது போல மருத்துவமனைகளுக்கும் ஜி.எஸ்.டி. யிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். அல்லது அந்தத் தொகையை சட்டப் பூர்வமாக திரும்பப்பெற வழிவகை செய்ய வேண்டும்.

மருத்துவர்களையும் மருத்துவமனைகளையும் நுகர்வோர் சட்டத்துக்குள் கொண்டுவந்துவிட்டு, அதே பிரிவில் மற்றவர்கள் அனுபவிக்கும் ஜி.எஸ்.டி. தொடர்பானசலுகைகளை டாக்டர்கள் அனுபவிக்கக் கூடாது என்று சொல்வது நியாயமற்றது. எனவே மருத்துவர்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பில் உரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

### ஜெயங்கொண்டம் நகர தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆண்டு நினைவு அஞ்சலி!

அரியலூர், ஆக. 10-

ஜெயங்கொண்டம் நகர கழகத்தின் சார்பில்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு,நகர கழக செயலாளர், நகர் மன்ற துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி தலைமையில், அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

நடைபெற்ற அமைதி ஊர்வலத்தில் கழக சட்டத் திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம். பி.பாலசுப்பிரமணியம், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன்,மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் ஆகியோர் அமைதி ஊர்வலம் சென்று, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு,மாலை அனுவித்து மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆர்.சங்கர், விசிக மாவட்ட செயலாளர் இரா. கதிர்வளவன், மதிமுக மாவட்டப் பொருளாளர் வீர.புகழேந்தி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தங்க.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.வசந்தபகலவன், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் சீ.சுரேஷ், நகர அவைத்தலைவர் ஞானபிரகாசம், நகரக் கழக துணைச் செயலாளர்கள் முரசொலி குமார், மா.செ.செந்தில்குமார், நகர பொருளாளர் பா. ரமேஷ், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.இராஜமாணிக்கம், கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி பஞ்சநாதன், வட்டக் கழக செயலாளர்கள் காசிநாதன், அம்பிகாபதி, அப்பர், ஆ.நட ராஜன், இதயத்துல்லா, மருதை.விஜயன், சங்கர், நடராஜன்,கிருபாநிதி, க.சிவபாலன் மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், வார்டுகழக நிர்வாகிகள், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் 11ஆம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.